# பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிக்கான அறிக்கை:

கண்ணதாசன் -விஸ்வநாதன் அறக்கட்டளையின் சார்பாக ‘Children Garden’ என்னும் பள்ளியில் கடந்த 06/10/2018 அன்று பேச்சுப்போட்டியும் கட்டுரைப்போட்டியும் நடைபெற்றது.

பேச்சுப்போட்டிக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு “அவனுக்கென்ன தூங்கிவிட்டான்”.

கட்டுரைப்போட்டிக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு “கடவுள் இருக்கிறார் அவர் நம் கண்களுக்குத் தெரிகிறாரா?.

பேச்சுப்போட்டியில் தி.ஐ. பள்ளியில் 12ஆம் வகுப்பு ‘இ’ பிரிவைச் சேர்ந்த மாணவி.செல்வி. சுவாதி லட்சுமி, முதற்பரிசினையும்;
கட்டுரைப்போட்டியில் 10ஆம் வகுப்பு ‘ஆ’ பிரிவைச் சேர்ந்த மாணவி. செல்வி. அனுவர்ஷினி இரண்டாம் பரிசினையும் பெற்றனர்.

இதனையடுத்து, பரிசு வழங்கும் விழா 20/10/2018அன்று பட்டினப்பாக்கத்தில் உள்ள செட்டிநாடு வியாஷ்ரம் என்னும் பள்ளியில் வழங்கப்பட்டது.

விழாவில் பேச்சுப்போட்டியில் முதற்பரிசுப்பெற்ற மாணவி.செல்வி. சுவாதி லட்சுமிக்குப் பொன்னாடைப் போர்த்தப்பட்டு, சான்றிதழும், கண்ணதாசன் உருவச்சிலையொன்றும் அதனுடன் பரிசுத்தொகை ரூ.3000/-மும் வழங்கப்பட்டது.

கட்டுரைப்போட்டியில் இரண்டாம் பரிசுப்பெற்ற மாணவி. செல்வி. அனுவர்ஷினிக்குப் பொன்னாடைப் போர்த்தப்பட்டு, சான்றிதழும், கண்ணதாசன் உருவச்சிலையொன்றும் அதனுடன் பரிசுத்தொகை ரூ.2000/-மும் வழங்கப்பட்டது.

<u>**வெளிப்பாடு**</u>:

இஃது மாணவக்கண்மணிகளுக்கு நல் ஊக்குவிப்பாக அமைந்தது. அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த இம்மேடை ஒரு களமாக அமைந்தது எனில் மிகையாகாது.

மேலும், பள்ளியில் உள்ள மற்ற மாணவர்கள் தாங்களும் இம்மாதிரியானப் போட்டிகளில் பங்குபெற வேண்டும் என்கிற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

■ மு. தன்ராஜ்சேகர், தமிழாசிரியர்.



பேச்சுப்போட்டியில் முதற்பரிசுப்பெற்ற மாணவி.செல்வி. சுவாதி லட்சுமிக்குப் பொன்னாடைப் போர்த்தப்பட்டு, சான்றிதழும், கண்ணதாசன் உருவச்சிலையொன்றும் அதனுடன் பரிசுத்தொகை ரூ.3000/-மும் வழங்கப்பட்டபோது எடுத்த புகைப்படம்.




கட்டுரைப்போட்டியில் இரண்டாம் பரிசுப்பெற்ற மாணவி. செல்வி. அனுவர்ஷினிக்குப் பொன்னாடைப் போர்த்தப்பட்டு, சான்றிதழும், கண்ணதாசன் உருவச்சிலையொன்றும் அதனுடன் பரிசுத்தொகை ரூ.2000/-மும் வழங்கப்பட்டடபோது எடுத்த புகைப்படம்.




பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டியில் பங்குகொண்டு பரிசுப்பெற்ற மற்ற பள்ளி மாணவர்களுடன் நம் பள்ளி மாணவிகள்.